Regd. No. M. 4593. "KUDI ARASU" 12பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 சனிக்கிழமை, 21-7-1945 ஆடி-மீ 6உ இதழ் 41

## திருவத்திபுரம்
## தணிகை உலகநாதன்—கமலா
## வாழ்க்கை ஒப்பந்தம்

### தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. சொற்பொழிவு

★

தாய்மார்களே,
தோழர்களே!

திருமணம் என்பது இடைக் காலத்தில் புகுந்த ஒன்றே ஒழிய ஆதியில் அமைந்ததில்லை. தனது சொத்து என்ற எண்ணம் ஏற்பட்ட பிறகும், அதை அனுபவிக்க ஒரு பிள்ளை வேண்டும், அப்பிள்ளையும் தனக்கே பிறந்ததாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் உதித்த பிறகும் தான் திருமண மூலமாக ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்கின்ற குடும்ப வாழ்க்கை ஏற்பட்டிருக்கலாமே யொழிய இயற்கையில் அமைந்ததொன்றல்ல. திருமண நுழைவுக்குப் பார்ப்பனனும் ஒரு முக்கிய காரணமாவான். மோட்சமென்றும் நரகமென்றும் கற்பித்துப் புதல்வனில்லாவிட்டால் 'புத்' என்னும் இடம் கிடைக்கும் என்றும், ஏழையானாலும் திதிகொடுக்கவேண்டும் என்று கூறிப் பாமர மக்களை ஏமாற்றினர். வைதிக முறைப்படிச் சடங்குகள் செய்து திருமணம் செய்வது மனுதர்ம சாஸ்திரப்படி முதல் மூன்று வருணத்தாருக்கே உரியது. நான்காம் வருணத்தாருக்கு உண்டு என்று கூற மனுதர்ம சாஸ்திரத்தில் ஆதாரம் இல்லை. ஆகவே நாம் செய்யும் இந்தச் சீர்திருத்த மணத்தை ஏளனம் செய்பவர்கள் தாங்கள் முதல் மூன்று வருணத்தைச் சேர்ந்தவர்களா என்பதை யோசிக்கவேண்டும். நாமே பெருமை தேடிக்கொண்டாலும் நமக்கு உண்மையில் பெருமை கிடைக்கிறதா என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

எதற்கெடுத்தாலும் நாம் 2000 ஆண்டு அல்லது அதற்கும் முற்பட்ட நூல்களில் இருந்து ஆதாரம் காட்டுகிறோம். அத்தகைய ஆதாரங்கள் தற்போது பயன்படா. சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்வதுதான் அறிவுடைமையாகும். மோட்டார் வந்ததும் கட்டைவண்டிப் பிரயாணம் குறைக்கப்படவில்லையா? "பொய்யும் வழுவும் தோன்றியபின்னர் ஐயர்யாத்தனர் கரணம் என்ப" என்று சடங்குகள் தோன்றியதைப்பற்றித் தொல்காப்பியம் கூறுகிறது. பொய்யும் வழுவும் எவ்வாறு புகுந்தன என்பதை ஆராயவேண்டும். புகுந்தது என்பதுதான் உண்மை; ஆரியர்களுடைய சூழ்ச்சியினால் அவர்கள் வருவாய்க்கு வழி தேடிக் கொண்டார்கள். ஆகையால் பலவிதமான கட்டுப்பாடுகளும் சடங்குகளும் வந்து புகுந்தன. இவ்வளவு சடங்குகளையும் சட்டத்தின் மூலமாக எளிதில் நீக்கிவிடலாம். பதிவுத் திருமணம் (Register marriage) வைதிகத் திருமணத்தைவிட சட்டப்படி அதிகம் மதிக்கக் கூடியதாகும்.

மாறுதல் என்பது இயற்கையாக நிகழ்வொன்று. நம் ஒவ்வொருவரிடமும் மாறுதல் இருக்கிறது. ஒவ்வொருவருடைய உடல் வளர்ச்சியிலும் எண்ணத்திலும் மாறுதல் இல்லையா? இம்மாறுதல் தானே உண்டாவது. ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இரவிக்கை அணிந்துகொள்வது பொது மகளிர் செயல் என்று நம்மவர் கருதினர். இன்று சிறு பெண்களும் உடம்பை மறைக்க ஜாக்கட் முதலியவை இல்லாவிட்டால் என்னவோமாதிரி நாணம் அடைகின்றனர். இரவிக்கையிலும் எத்தனைவிதமான தினுசுகள் வந்துவிட்டன? நாளைக்கு ஒரு மாறுதல் ஏற்படவில்லையா? பெண்களின் காதணிகளில் எத்தனை மாற்றம்? இவைகளைக் குறை கூறுவார் யார் இருக்கிறார்? அதுபோலத்தான் திருமணம் முதலான நிகழ்ச்சிகளில் ஏற்படும் மாறுதலும். அம்மாறுதல் நம் அறிவு, நலம் முதலியவற்றிற்குப் பொருத்தமாக இருக்கவேண்டும்.

இன்றைய மணத்தில் ஒரு முக்கிய சீர்திருத்தம் என்னவென்றால் பார்ப்பனன் வந்து திருமணம் செய்யவில்லை என்பதாம். நாம் அறியாதிருந்தபோது அவன் சொல்லியபடி எல்லாம் கேட்டு நடந்து வந்தோம். இன்று உண்மை உணர்ந்த பின் வேண்டாம் என்பது தப்பா? தவிர்விட்டுத் தகப்பன் காலைக் கழுவுவது புத்தி இன்மையே ஒழிய மானம் இழக்கும் செயலன்று. ஆனால் ஆரியனுக்குச் செய்வது புத்தியையும் மானத்தையும் இழக்கும் செயலாம். ஒவ்வொரு திருமணத்திற்கும் வெளியூர்களிலிருந்து ஏராளமான உறவினர்களையும் நண்பர்களையும் வரவழைத்து வீண் செலவு செய்வது [illegible]காரத்தனமாகும். பட்டப் பகலில் நூற்றுக்கணக்கான விளக்குகளை ஏற்றிவைக்க வேண்டியதில்லை. அவ்வாறு செய்வது தெருவில் பட்டப் பகலின் மத்தியம் பிடித்து நடப்பது போன்றதாகும். விளக்கு எப்படி திருமணத்துக்குச் சாட்சியாக

ரோஜா முத்தையா

வரும் என்பதை யோசிக்கவேண்டும்.

தொன்னிக்கட்டை எதிரில் வருவது நம்மவர் நம்பிக்கைப்படி சகுனத்தடையாகும். திருமணத்தில் நெருப்பை மூட்டி அதில் மட்டையலே...மட்டையலே...என்பது போல நமக்கும் புரியாத மந்திரங்களைச் சொல்லிவைத்து நெய்யை ஊற்றிப் புகைத்து அதன் எதிரில் அமர்ந்துகொண்டு திருமணம் செய்வதாமா? சட்டி பானைகளை வரிசையாக அடுக்கி வைப்பது ஏன்? ஒருவேளை அவை உருண்டு உடைந்துவிட்டால் அதன் பொருளே வேறு அல்லவா? சாணியை உருட்டிவைத்துப் பொட்டிட்டுத் தேங்காய் உடைப்பது ஏன்? தப்பித் தவறி அந்தத் தேங்காய் சிறிது கூனியாக உடைந்துவிட்டால் கதிகலங்கி நம்பிக்கை குறைவடைவது ஏன்?

எந்தக் கடவுளும், மதமும் இப்படித்தான் கலியாணம் நடத்திவைக்க செய்யவேண்டுமென்று விதிக்கவில்லையே. எட்டுவிதமான திருமணங்கள் உண்டென்று கூறுகிறார்கள். அவற்றின் ஆபாசங்கள் சொல்லமுடியாதவை, அதில் காந்தர்வ மணம் உயர்ந்ததாம். "காந்தர்வம்" என்பது காதல் மணம் என்றும், அதுதான் பண்டைக்கால மணம் என்றும், புலவர்களும், கதைக்காரர்களும் காதலைப் பிய்த்துப் பிடுங்கிவிட்டார்கள். என்னளவில் இத்தகைய காதலில் நம்பிக்கை இல்லை. புராணங்களின் எந்தக் காந்தர்வ விவாகம் சுகமாய் நடந்தது. காந்தர்வ விவாகத்திற்குச் சகுந்தலை—துஷ்யந்தன் திருமணத்தை உதாரணமாகக் கூறுவார்கள். அந்தத் திருமணம் என்னவாயிற்று என்பது உங்களுக்குத் தெரியும். பெண்களை நெடுநாட்கள் வீட்டிலேயே அடைத்துவைத்து உலக அநுபவம் இல்லாமல் செய்து என்றோ ஒருநாள் வெளியே வந்தால் கண்டவன்மேல் காதல் பிறப்பது இயற்கைதானே. உலக அநுபவம் இல்லாத பெண்களை டிராமாவுக்குக் கூட்டிச் சென்றால் வேடம் பூண்டு விளக்கு வெளிச்சத்தில் அழகாகத் தோன்றும் ஒருவனைக் காதலிக்கிறாள். எப்படித் தெரியும் அந்த ஆளின் குணங்கள் அவளுக்கு? இத்தகைய காதலும் ஒரு காதலா? இதைப் போன்றுதான் புராணங்கள் கூறும் காந்தர்வ விவாகம். உண்மையில் காதல் மணம் என்றால் பெண்களும் ஆண்களும் சம நிலையில் பழகும் வாய்ப்புத்தந்து ஒருவருடைய குணாகுணங்களை மற்றவர் அறியும் சமயம் கிடைத்து ஒருவருடைய வாழ்க்கைக்கு ஒருவர் இன்றியமையாதவர் என்ற நிலையில் காதல் கொள்வதுதான் உயர்ந்த காதலாகும்.

சிலர் மணமக்களுடைய சம்மதம் இல்லாமலேயே சோதிடனிடம் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்துவிடுகிறார்கள். சோதிடன் பண வருமானத்தை முன்னிட்டு ஏதேதோ உளறிப் பொருத்தம் என்று கூறிவிடுகிறான். சிலர் இந்த மகனுக்கு இந்தப்பெண்ணைக்கொள்ளலாம் என்றால் எங்களுக்கு வெள்ளைநிறப் பூக்கொடு என்று கடவுளிடம் கேட்டு அவ்வாறே வெள்ளை நிறப் பூ விழுந்தால் திருமணம் செய்துவிடுகிறார்கள். இது பொருத்தமான திருமணமா என்று யோசித்துப் பாருங்கள். அவனவன் தன்னைத் திருமணம் செய்வது பொருத்தமா என்று கடவுளிடம் கூறிகேட்டுப் பொருத்தம் என்று பூக்கொடுத்தால் திருமணம் செய்துவிடுவார்களா? எவ்வளவு அறியாமை!

ஏது கடவுள்? உங்களிடம் இடம், உணவு முதலிய எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு உங்களை வெளியே நிறுத்தும் கடவுள் ஒரு கடவுளா? இவ்விதமான கடவுளுக்கு ஏன் பணத்தை வீணாகச் செலவு செய்வது? இப்பொழுது தினசரிச் செய்திகளை நோக்குவோமானால் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி வசதியின்றித் தவிக்கின்றார்கள் என்பது தெரியும். இவ்வாறு நாடு வருந்தும் சமயத்தில் கடவுளுக்கு ஏன் வருடம் ஒரு திருமணம் செய்வது? சென்ற வருடம் செய்துவைத்த திருமணம் என்னவாயிற்று? இதைக் கேட்டால் நாஸ்திகமா? சென்ற ஆண்டு திருமணம் செய்துகொள்ளப் பணம் கேட்ட ஒருவன் இந்த ஆண்டும் திருமணத்துக்கென்று பணம் கேட்டால் சென்ற ஆண்டுத் திருமணம் என்ன ஆயிற்று? என்று கேட்கமாட்டோமா? நாமே சுருக்கமாகச் செலவு செய்யவேண்டுமென்றால் இந்தச் சாமிக்கு ஏன் இவ்வளவு செலவு? ஒரு ஆசிரியரிடம் 5 ரூபாய் கொடுத்து பிள்ளைக்குப் பாடம் சொல்லச் செய்து பையன் பெயில் ஆகிவிட்டால், ஏன் பெயிலானான் என்று ஆசிரியரைக் கேட்கிறோம். சாமியைக் கேட்டால் பதில் சொல்லுமா? அதற்குக் கண்ணிருந்தால் உலகில் ஏழைகளும், நோயாளிகளும் எப்படி இருப்பார்கள்? இவர்களுக்கும் சாமிக்கும் சம்பந்தம் இல்லை என்பதுதானே பொருள். நான் இவ்வாறெல்லாம் கூறுவதால் கடவுளைப் பழிப்பதாக நினைக்கிறீர்கள். கடவுள் பேரால் நடக்கும் பித்தலாட்டங்கள் யாவும் ஒழியவேண்டும் என்பதுதான் என் ஆசை.

இத்தகைய சீர்திருத்த மணங்கள் இவ்வூரில் மிகுதியாக நடைபெற வேண்டும். நீங்கள் யாவரும் அதற்கான செயல்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துக்குடி நாகம்மாள் ஞாபகார்த்த பகுத்தறிவு கழக திறப்புவிழா 1-7-45ந் தேதி முனிசிபல் உபதலைவர் சி. செல்லையா டேவிட் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. தோழர் வீ. எஸ். சோமதி நாயகம் கழகத்தை திறந்துவைத்தார். தோழர்கள் எஸ். தனபாக்கியத்தம்மாள், எம். வைகுண்டம் முறையே நாகம்மாள், கே. கே. ஏ. பீ. அவர்களின் படங்களைத் திறந்துவைத்தார்கள். தோழர் எம். என். சிவசாமி அவர்கள் இளைஞரும் பகுத்தறிவும் என்பது பற்றி கேட்பவர்கள் உணர்ச்சி ததும்பப் பேசினார்.


## ‘குடி அரசு’ பைண்டு வால்யூம்

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5—0—0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு.


அறக்கட்டளை

# ஆந்திர நாட்டில் பெரியார்

## நெல்லூரில் 3-நாட்கள் பெரியாரின் சொற்பொழிவு

☆

13-7-45 காலை கிராண்டிரங்க் எக்ஸ்பிரசில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், 2, 3 மாத காலமாக ஆந்திரத் தோழர்கள் அழைப்புக்கிணங்கி தமது தோழர்கள் ஜனார்த்தனம், மணி முதலியவர்களுடன் நெல்லூருக்குச் சென்றார். ரயிலடிக்குப் பல பிரபல தோழர்கள் வந்திருந்தனர். பெரியாரவர்கட்கு மாலை அணிவிக்கப்பட்டு காரில் தோழர் சி. எல். குப்தா, போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்கள் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவ்வூரிலுள்ள பல சங்கங்களின் சார்பில் பல தோழர்கள் அன்று முழுவதும் பெரியார் அவர்களைக் கண்டு பேசிச் சென்ற வண்ணமிருந்தனர்.

### நெல்லூரில் சு. ம. திருமணம்

14-7-45 மாலை 6½ மணிக்கு லட்சுமி நாராயண செட்டி டவுன் ஹாலில் தோழர்கள் கோபாலகிருஷ்ணனுக்கும் முனிரத்தினத்திற்கும் சீர்திருத்த மணம் (சு. ம.) எவ்வித சடங்குமின்றி குறைந்த நேரத்தில், குறைந்த செலவில் பெரியார் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது. சுயமரியாதைத் திருமணத்தின் அவசியத்தைப் பற்றியும் அதனால் ஏற்படும் பலனைப் பற்றியும் நீண்டநேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

பின்னர் அவ்விடத்திலேயே பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு டவுன் ஹாலின் சொந்தக்காரரும், அவ்வூர் முனிசிபல் சேர்மனும், ஜமீந்தாருமான தோழர் ஆர். எல். செட்டி அவர்கள் தலைமை வகித்தார். பெரியார் அவர்கட்கு வரவேற்பிதழ் ஆந்திரத்தில் வாசித்தளிக்கப்பட்டது. சமுதாய சீர்திருத்த சங்கம், ஆரிய சமாஜம், தாழ்த்தப்பட்டோர் சங்கம், பிரம சமாஜம் முதலிய சங்கங்களின் சார்பில் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 2 மணி நேரத்திற்கு மேல் மிக்க ஆதாரத்தோடு தற்கால நிலைமையைப் பற்றியும், மக்கள் உள்ள நிலைமையைப் பற்றியும், சீர்திருத்தத்தின் அவசியத்தைப் பற்றியும் தெலுங்கில் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினார்.

தோழர் ஜனார்த்தனம் எம். ஏ., அவர்கள், உலக சீர்திருத்தவாதிகளின் சரித்திரங்களை எடுத்துச் சொல்லி, தற்கால சீர்திருத்தத்தை அதற்குப் பொருத்தி தெலுங்கில் பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின், தோழர் செஞ்சையப்பா அவர்கள் வந்தனம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

15-7-45 மாலை 4 மணிக்கு பெரியார் அவர்கள் தோழர் அனுமான் ரெட்டி அவர்கள் அழைப்புக்கிணங்கி முனிசிபல் ஸ்கேவஞ்சர்கள் உறைவிடத்திற்குச் (Scavengers' Colony) சென்று பார்வையிட்டார். பெரியார் அவர்கள் வந்ததின் ஞாபகமாக அன்று அவர்கட்கு புளியோதரை அளிக்கப்பட்டது. பெரியார் அவர்களும் தமது தோழர்களுடன் அவர்களோடு புளியோதரை உண்டு களித்தார்.

பின் அங்கு ஓர் சிறிய சொற்பொழிவு ஆற்றியபின் பொதுக் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பொதுக்கூட்டம் டவுன் ஹாலில் மாலை 6 மணிக்கு தோழர் A. சென்னாரெட்டி M. A., B. L., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. டெபுடி கலெக்டரும் அவ்வூர் பிரபல பணக்காரரும், பெரிய பிரசுரன் பொழுதுபோக்குச் சாலையின் (டேவிஸ் ஸ்டேட்டின்) டைரக்டருமாவர். அன்று பெரியார் அவர்கள் சமுதாய சீர்திருத்தத்தின் அவசியத்தைப் பற்றியும், பழமைக்கும் புதுமைக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு விளக்கியும் சுமார் 2-30 மணி நேரம் வரை பேசினார். பின் தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனத்துடன் கூட்டம் இரவு 10 மணிக்கு முடிந்தது.

16-7-45-ந் தேதி மாலை கடைசியாக மீண்டும் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அன்று அக்கூட்டத்திற்குத் தோழர் சுப்பராம நாயுடு பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமை தாங்கினார். பெரியார் அவர்கள் பிராமண, பிராமணரல்லாதார் இவர்களுக்குள்ள வேறுபாட்டை விளக்கியும், திராவிட நாடு கேட்கப்படுவதின் காரணத்தை விளக்கியும், இந்துமதத்தில் உள்ள ஆபாசத்தைப் பற்றியும் நன்கு விளக்கிப் பேசினார். கூட்டத்தில் சிலர் கேள்வி கேட்டனர். கேள்விகட்குத் தக்க பதில் அளிக்கப்பட்டது. கேள்வி கேட்டவரும் திருப்தியடைந்து நேரில் பேசி இன்னும் தம்மிடத்திலுள்ள சந்தேகங்களை நீக்கிக்கொள்வதாகக்கூறி அமர்ந்தார். பின் தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது இரவு 10-30 மணிக்கு முடிந்தது. அடுத்த நாளும் பெரியார் அவர்கள் இருக்கவேண்டும் என்று பலர் விரும்பியபோதிலும், தமிழ்நாட்டில் ஏற்கனவே ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகளுக்கு வரவேண்டி இருப்பதால், 17-ந் தேதி நெல்லூரை விட்டுப் புறப்பட்டு 18-ந் தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்தார்.

## திருவாரூர் திராவிடர் கழக கட்டிட நிதிக்கு வேண்டுகோள்

சென்ற 29-6-45ல் அன்று திருவாரூர் திராவிடர் கழகம் சுயமரியாதைச் சங்கம் ஸ்தாபனங்களுக்கு சொந்தமாக குமரகோயில் தெருவில் T. S. No. 2554ல் 7725 சதுரடியும் எதிரிலுள்ள T S No 2657/1ல் சதுர அடி 3110 உள்ள மனைக்கட்டு (தென்னங்கன்று உட்பட) வாங்கப்பட்டிருக்கிறது. இதன் கிரயம் ரூ. 3100. டி கழகங்கள் கட்டிடத்திற்கு இயக்கத் தோழர்கள் பெருந் உதவி செய்யும்படி டி கழகங்கள் கட்டிட கமிட்டி செயலாளர்கள் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறோம்.

எம். சே. ஜம்புலிங்கம்,

பி. வி. ஓ. கோபாலன்,

குறிப்பு; டி நிதிக்குப் பணம் கொடுப்பவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி ரசீது பெற்றுக்கொள்ளவும்.

P. V. O ராஜகோபாலன்,

ஷ்ராப் வியாபாரம், கடைவீதி, திருவாரூர்.

ரோஜா முத்தையா

## திராவிட மாணவர் பிரசாரம்

தஞ்சை மாவட்டம்: 1-7-45-ல் தஞ்சாவூர் மணிக்கூண்டுக்கருகில் நகர திராவிடர் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் எஸ். வி. சுப்பண்ணா தலைமையில் தோழர்கள் அஜீஸ், ரங்கையன், டி. கே. சீனிவாசன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

2-7-45 அடியக்கமங்கலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் டாக்டர் எம். எம். தாவூத் தலைமையில் தோழர்கள் வி. ஜி. ரெங்கராசு, ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் எஸ். எஸ். தாவூத் வரவேற்றுப் பேசினார். தோழர் ஷேக்தாவூத் நன்றி கூறினார்.

3-7-45 வேலூரில் பேரளம் தோழர் மகாதேவன் தலைமையில் திராவிடர் கழகச் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஷேக்தாவூத், எஸ். கருணானந்தம், ஈ. வெ. கி. சம்பத் பேசினர். தோழர் ராஜையா நன்றி கூறினார்.

4-7-45 குடந்தையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் அண்ணாதுரை அவர்களும் தோழர் ஈ. வெ. கி சம்பத்தும் பேசினார்.

5-7-45 திருப்பூண்டியில் தோழர் பக்கிரிசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் முகமது ஹனீபா, செய்யது அகமது, எஸ். கருணானந்தம், ஈ. வெ. கி. சம்பத் விரிவுரை செய்தனர்.

6-7-45 நாகூரில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் தோழர் பொ. பழனியாண்டி தலைமை தாங்கினார். தோழர்கள் மு. செ. ஆபுதீன், எஸ். கருணானந்தம், ஈ. வெ. கி. சம்பத் விளக்கமாகப் பேசினார்கள். தோழர் மதியழகன் நன்றிகூறினார்.

7-7-45 நன்னிலத்தில் நடைபெற்ற திராவிட மாணவர் கழக சிறப்புக் கூட்ட விழாவில் தோழர் ஜி. சௌரிராஜன் தலைமையில் தோழர்கள் எஸ். கருணானந்தம், வல்லாலடி ஷம்சுதீன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் மாணவர் கடமை பற்றிப் பேசினர். தோழர் எம். வெற்றியழகன் (எம். ஜெயராமன்) நன்றி கூறினார்.

8-7-45 திருத்துறைப்பூண்டி திராவிடர் கழகச் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் என். அப்துல்லா தலைமையில் தோழர்கள் புலவர் க. ச. மணியம், ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., புதுவை 'தொழிலாளர் மித்திரன்'' ஆசிரியர் காஞ்சி கலியாணசுந்தரம், வல்லாலடி ஷம்சுதீன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் விளக்கமாகப் பேசினார்கள். தோழர் இராசப்பன் நன்றி கூறினார்.

9-7-45 பேராவூரணியில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ஆர். வேலுசாமி தலைமை தாங்க, தோழர்கள் எஸ். கருணானந்தம், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசிய பின் தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் பேசுகையில் சில "கம்யூனிஸ்ட்" தோழர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கமாகப் பதில் கூறினார். தோழர் வி. எஸ். குழந்தை யாவருக்கும் நன்றி கூறினார்.

13-7-45-ல் ஒரத்தநாட்டில் தோழர் சம்சுதீன் ராவுத்தர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கலியாணசுந்தரம், கருணானந்தம், பரமானந்தம் ஆகியோர் பேசினர்.

* *

10-7-45 அன்று திருத்துறைப்பூண்டியில் அரங்கண்ணல் தலைமையில் திராவிட மாணவர் கழகம் நிறுவப்பட்டு தோழர்கள் அரங்கண்ணல் தலைவராகவும், கா. தியாகராசன் செயலாளராகவும், கோவலன் உதவி செயலாளராகவும், தோழர் மாதவன் பொருளாளராகவும், மற்றும் ஏழு பேர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திராவிட மாணவர்களே!
ஒன்றுபடுங்கள்!

ஆரிய ஆபாசங்களை
ஆராய்ந்து பாருங்கள்!

சாந்தியம் காட்டு
மிராண்டிக் காலத்தது!

போலிப் பொதுவுடைமை
பார்ப்பனீயத்தின்
மாற்றுரு!

திராவிட மாணவியக்கமே
உங்களுக்கு சிறந்த
வழிகாட்டி!

## நன்னிமங்கலம் திராவிடர் கழகம்

2-7-45ந் தேதி திங்கட்கிழமை தென்னாட்டுத் தனிப்பெரும் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நன்னிமங்கலம் திராவிட வாலிபர் கழக 5-வது ஆண்டுவிழா நடைபெற்றது. அதுபோது தலைவர் அவர்களை மாலை 4மணிக்கு (பிளசர்) மோட்டாரில் ஊர்வலமாக மேளவாத்தியத்துடன் பெரியார் வாழ்க, திராவிடநாடு திராவிடருக்கே, ஜாதித்திமிர் ஒழிக, மதவெறி ஒழிக, திராவிடநாட்டை அடைந்தே தீருவோம். என்கிற முழக்கத்துடன் லால்குடி ரயில்வேஸ்டேஷனிலிருந்து ஊர்வலத்துடன் நன்னிமங்கலத்திற்கு அழைத்துவரப்பட்டது. சுமார் 5½ மணிக்கு உருவப்படம் எடுக்கப்பட்டது. பிறகு சில மாணவர்கள் சுயமரியாதை கீதங்களும் சமதர்ம கீதங்களும் பாடினார்கள். 6மணிக்கு பெரியாரின் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. என். எம். நடராஜன் அவர்களால் சங்கத்தின் அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் பெரியார் அவர்களுக்கு வாழ்த்துப் பத்திரம் சங்கத்தின் சார்பாக வாசித்து அளிக்கப்பட்டது. பிறகு தஞ்சை ஜில்லா ஆனரரி ரெக்ரூடிங் ஆபீசர் தோழர் எஸ். எஸ். மணி அவர்களும் தென்னிந்திய ரயில்வே ஆபீசர் சத்தியநாதன் அவர்களும் பொன்மலை தமிழன் அவர்களும் வருங்கால உலகமும் இளைஞர்கள் கடமையும் திராவிட முன்னேற்றமும் கல்வியும் என்பவற்றைப்பற்றியும் மிக விரிவாக சொற்பொழிவாற்றினார்கள். பிறகு பெரியார் அவர்கள் இந்துமதமும் திராவிடர்களும் என்பதைப்பற்றியும் ஆரியர்கள் இந்நாட்டு மக்களுக்கு செய்துவரும் கொடுமைகள் பற்றியும் தாழ்த்தப்பட்டவர்களும் திராவிடர்களும் ஒரே இனம் என்றும் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற ஒரு இனம் இருக்கக்கூடாதென்றும் சுமார் 1¾ மணிநேரம் விரிவாகவும் ஆர்வத்துடனும் எடுத்துரைத்தார்கள். பிறகு சங்கத்தின் சார்பாக வந்தன உபசாரம் கூறப்பட்டு 11 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

குறிப்பு:- ஆண்டுவிழாவிற்கு சுமார் 1500 ஜனங்களுக்குமேல் ஆண்களும், பெண்களும் வந்திருந்தார்கள். அதில் வெளியூர் தோழர்கள் எல்லோருக்கும் விருந்து அளிக்கப்பட்டது. இந்த ஆண்டு விழாவிற்கு பொருள் உதவி செய்த தோழர் எல்லோருக்கும் சங்கத்தின் சார்பாக வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம் என காரியதரிசி தோழர் என். எம். நடராஜன் தெரிவிக்கிறார்.

கம்பம் ஜனாப் பி. பீர்முகம்மது பாவல

ஜெயராம்
காயசித்தி லேகியம்

# சென்னை தெ.இ.ந.உ. சங்க போலிகளின் போலி ஜஸ்டிஸ் கூட்டத்தில் கலவரம்

## ஜஸ்டிஸ்கட்சி என்று கூற உமக்கு உரிமையேது?

### கேள்விக்குப் பதில் கூற முடியவில்லை

(நேரில் கண்டவன் எழுதுவது)

சென்னை, ஜூலை. 6-

ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து விலகிவிட்ட கோஷ்டியினரின் தெ இ. ந. உ. சங்கம் என்ற பெயரால் 5-7-45 மாலை 6-30 மணிக்கு பார்க் டவுன் மெமோரியல் மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டினர், சுமார் 350 பேர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் திராவிடர் (ஜஸ்டிஸ்) சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த தோழர்களேயாகும்.

கூட்டத்திற்கு சர். பி. டி. ராஜன் அவர்கள் தலைமை வகித்தார். பின்னர் சிலர் பேசிய பின், சர். ஆர். கே. சண்முகம் அவர்கள் ஆங்கிலத்தில் பேச எழுந்தார். இந்நிலையில் சென்னைத் திருவல்லிக்கேணி திராவிடர் கழகக் காரியதரிசி தோழர் துரை அரசு அவர்கள், ஒரு காகிதத்தில் "இக்கூட்டத்தினர் தங்களை ஜஸ்டிஸ் கட்சியினர் என்று கூறிக்கொள்ள உரிமை யிருக்கிறதா? உரிமை யில்லாத நிலையில் எப்படிக் கூறலாம்?" என்று கேள்வி ஒன்று எழுதி கூட்டத் தலைவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தார்.

அதற்குப் பதில் கூறாமலேயே சர். ஆர். கே. எஸ். எழுந்து ஆங்கிலத்தில் பேசினார். உடனே கூட்டத்தினரில் பெரும்பாலோர் தமிழில் பேசுங்கள், கேள்விக்குப் பதில் கூறுங்கள் என்று நாலாபக்கங்களிலிருந்தும் கூறினர். சர். சண்முகம் உடனே உட்கார்ந்துவிட்டார். கூட்டத் தலைவர் எழுந்து இங்கு சில ஆந்திரர்களும் வந்திருப்பதால் தமிழில் பேச முடியாமலிருப்பதாகவும், பேசப்படும் விஷயமும், வேவல் திட்டத்தைப் பற்றியாதலால் அமெரிக்குக் கேட்குமாறு ஆங்கிலத்தில் பேசப்படுவதாயும் கூறினார். மீண்டும் தமிழ் தமிழ் என்று கூறப்பட்டன.

பின்னர் 10 நிமிஷங்கள் வரை ஒரே சத்தமாக இருந்து ஒரு பொது அமைதி ஏற்பட்டது. சர் சண்முகம் மீண்டும் தமது பேச்சை ஆரம்பித்தார் ஆங்கிலத்திலே.

இந்நிலையில் கார்ப்பொரேஷன் கௌன்சிலரும் விலகிப்போன கோஷ்டியினரில் ஒருவருமான தோழர் எம். தாமோதரம் கூட்டத்திற்குள் நுழைந்து "யாரடா கூப்பாடு போடுவது?" என்று "சபர்தார்" செய்து ஒருவரைப் பிடித்திழுத்தார். (உடனே கூட்டத்தினர் ஆத்திரமடைந்து தாமோதரம் முதுகிலும் ஒரு அப்ளாஸ் வைத்ததாகக் கூறப்படுகிறது.)

மீண்டும் பெருத்த கலவரம் ஏற்பட்டது. கூட்டம் 15 நிமிடங்கள் தடைப்பட்டது. அதற்குள்ளாக போலீஸார் மண்டபத்திற்குள் பிரவேசித்து அமைதியாக்க முயன்றனர். கூட்டத்தினர் போலீஸாரிடம் நடந்த விவரங்களைக் கூறி தோழர் தாமோதரத்தை மண்டபத்தைவிட்டு வெளியே அனுப்பும்படிக் கூறினர். இதற்குள்ளாக தோழர் பி. பா. பிரவேசித்து தோழர் தாமோதரத்தைக் கண்டித்து வெளியே தள்ளிக்கொண்டு போய்விட்டார். பின்னர் சர் சண்முகம் பேச்சு முடிவுற்றது. கடைசியாகப் பேசிய தோழர் அண்ணல்தங்கோ என்பவர் பெயரெல்லாம் தமிழ் மொழியிலே வைத்துக்கொள்ள வேண்டும் என்றுகூறி ராமசந்திரா ரெட்டி, சண்முகம்செட்டி என்பதெல்லாம் இந்து (வட) மொழி யென்று கூறினார்.

உடனே கூட்டத்தினர் அவ்விதமானால் நீங்கள் தமிழரா இந்துவா யென்று கேட்டனர், அத்தோழர்தான் தமிழன்தான் என்று விடையகன்றார்.

உடனே கூட்டத்தினர் அவ்விதமானால் உங்கள் தலைவர் சர் சண்முகம் தம்மை இந்து என்று கூறிக்கொள்கிறாரே ஏன் என்று கேட்டனர். அது அவருடைய சொந்த அபிப்பிராயம். எனினும் நான் அதற்காக வெட்கப்படுகிறேன் என்று கூறினார். கூட்டத்தினர் வெட்கம் வெட்கம் என்று கோஷித்தனர். சர் சண்முகம் தலை குனிந்துகொண்டு நகைத்த வண்ணம் காட்சியளித்தார். இவ் வைபவத்துடன் கூட்டம் இரவு 8 மணிக்குள்ளாகவே முடிந்து விட்டது.

தவிர இக்கூட்டத்தில் திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றியோ அன்றியும் திராவிடர்களின் உரிமையைப் பற்றியோ சிறிதுகூட பேசப்படவில்லை. பழைய பத்தாம் பசலிக் கொள்கைக் கேற்பவே எல்லாம் நடைபெற்றது. இன்னும் கூறவேண்டுமானால் திராவிடர் இயக்கத் தோழர்கள் அக்கூட்டத்திற்கு வந்திராவிடில் 350 பேர்களுக்குப் பதிலாக 30 பேர்கள்தானிருந்திருப்பர்.

## சென்னை திராவிட மாணவர் மன்றம்

இம் மன்ற அமைப்புக் கூட்டம் சென்னை முல்லைப் பதிப்பகத்தில் 10-7-45-ல் மாலை நடைபெற்றது. சென்னையின் பல கல்லூரிகளினின்றும் திராவிட மாணவர்கள் திரண்டு குழுமியிருந்தனர். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் க. அன்பழகன் அவர்களும் தோழர் எ. பி. ஜனார்த்தனம் எம். ஏ. அவர்களும் மாணவர் இயக்க வளர்ச்சியும் அதை நடைமுறைத் திட்டமும் குறித்து அரிய உரையாற்றினர். நடப்பு ஆண்டிற்குச் செயற் குழு உறுப்பினர் தேர்வு முடிந்ததும் கூட்டம் முடிவுற்றது

ரஜாவில் வந்திருக்கும் நமது
14-ம் சேனை வீரர்கள்;
கவர்னர் யுத்த நிதியில்
துருப்புக்கள் வசதி நிதிக்கு என்று குறிப்பிட்டு
பணம் அனுப்பப்படுவதை அறிந்தால்
ஜாப்களை ஒழித்துக்கட்ட
அதிக சந்தோஷத்துடன் போர்முனைக்குத் திரும்பிச் செல்வார்கள்
அவர்கள் தங்கள் வேலையை அறிவார்கள்
அதைப்போன்று நாமும் நமது வேலையை
உணர்ந்து நடப்போமாக

ரோஜா முத்தையா

குடி அரசு

1945-ஞு ஜுலைமீ 21உ

# வேவல் மாநாடு முறிவு

வேவல் மாநாடு முறிந்து விட்டது—முறிந்தது சரியா தப்பா என்று கேட்டால் காந்தியாரைப் போல் "முறிந்திருக்கவும் கூடாது, (வெற்றியாய்) நடந்திருக்கவும் கூடாது" என்று தந்திரமாய்ச் சொல்லுவதின் மூலம் பலாபலனுக்குத் தப்பித்துக் கொள்ளும் மாதிரியில் நமக்குப் பதில் சொல்லவெட்கமாய் இருக்கிறது. ஆனாலும் ஒன்று சொல்லுவோம் அதாவது மாநாடு (தோல்வியாய்) முறிவுற்றது காங்கரசுக்கும் முஸ்லிம் லீகுக்கும் நாட்டிலுள்ள மற்றக் கட்சிகளுக்கும் நலம் என்றுதான் சொல்லவேண்டும், என்னவென்றால்,

காங்கரஸ் இஷ்டப்படி காரியம் நடந்திருந்தால் அதாவது முஸ்லிம் அங்கத்தினரில் ஒருவரையாவது காங்கரஸ் சிபார்சு செய்யும்படியான திட்டம் அல்லது காங்கரஸ் விருப்பம் வெற்றிபெற்றிருந்தால் முஸ்லிம் லீகின் ஓட்டையும் வெடிப்பும் ஏற்பட்டு அதற்குக் கட்டாயம் பலக்குறைவு உண்டாகிவிடும்.

லீக் இஷ்டப்படி முஸ்லிம்களை லீக்குதான் சிபார்சு செய்ய வேண்டும் என்கின்ற லீக்திட்டம் அல்லது விருப்பம் வெற்றி பெற்று இருந்தால், காங்கரசின் "எல்லா இந்தியப் பிரதிநிதித்துவ" ஜம்பத்தில் ஓட்டை மாத்திரமல்ல, வெடிப்புமாத்திரமல்ல, ஆட்டமே கொடுத்துவிடும். ஆதலால் அதன் (வேவல் திட்டத்தின்) தொடக்கமே இரண்டில் ஏதாவது ஒன்று ஒழியட்டும் என்கின்ற தத்துவத்தின் மீது தொடங்கியதாகும். ஆனால் இதற்குக் காங்கரஸ்காரர்களும், பார்ப்பனர்களும், பதவி ஏமாற்றமடைந்தவர்களும் கட்டுப்பாடாக ஜின்னா சாயபு மீது குற்றம் சொல்லுவது கடைந்தெடுத்த முட்டாள்தனம், அல்லது வேண்டுமென்றே சொல்லும் போக்கிரித்தனம் ஆகும் என்று வலியுறுத்திக் கூறுவோம்.

ஏனெனின் ஒருவன் தனது ஜீவநாடியை வெட்டிக்கொள்ள சம்மதிக்காவிட்டால், அது பிடிவாதமோ? அல்லது முரட்டுத்தனமோ? அல்லது ஆணவமோ ஆகிவிடுமா என்று கேட்கிறோம். மற்றும் ஒருவன் தனது வீட்டுக்குச் சற்று கெட்டியான பூட்டுப்போட்டால் அது அயோக்கியத்தனமாகிவிடுமா என்றும் கேட்கிறோம்.

முஸ்லிம்களுக்கு ஒரு ஸ்தாபனமிருக்கும் போது "அவர்கள் நலனைக் கவனிக்க எனக்கும் பாத்தியம்" என்று அறிகிறதால் முஸ்லிம் அல்லாத வேறு யாராவது பாத்தியம் கொண்டாட முடியுமா? முஸ்லிம் ஸ்தாபனத்தை காங்கரஸ் ஒப்புக்கொள்ளாமல் இருந்திருந்தால் ஒரு சமயம் அதற்கும் தான்தான் பிரதிநிதித்துவம் என்று சொல்லத் துணியலாம்.

வட்டமேஜை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நான்தான் பிரதிநிதி என்று காந்தியார் சொன்னபோது டாக்டர் அம்பேத்கார் அவர்கள், "தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாகிய நான் அவர்கள் பிரதிநிதியாக அழைக்கப்பட்டு இங்குவந்து கூறுகிறேன். நீங்கள் சிறிதும் சிந்தனையில்லாமல் மறுபடி மறுபடி உங்களையே பிரதிநிதி என்று சொல்லுகிறீர்களே, உங்களுக்குச் சிறிதாவது வெட்கமில்லையா" என்றும், இதுதான் மகாத்மா தன்மையா என்றும் கேட்டார். காந்தியார் பேசாமல் தலை கவிழ்ந்து கொண்டார். அதற்குப் பதிலாகப் பார்ப்பனப் பத்திரிகைகள் "அம்பேத்காரின் ஆணவம், குறும்பு, அக்கிரமம், அகம்பிரசங்கித்தனம்......" என்றெல்லாம் வைது வைது எழுதின. அம்பேத்கார் அவர்கள் அந்த வசவுகளை சூரியன் பக்கம் திருப்பி விட்டுவிட்டு கடைசியாக அவரே தலைவராகி அவரது கொடியின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களை கூடிய அளவு மேன்மைப்படுத்திவருகிறார். அப்படிப்பட்டவர் அதிலும் இந்து மதம் எனது மதம் அல்லவென்றும் "அதன் ஆதாரமாகிய கீதைகள் முட்டாள்களின் பிதற்றல்கள்" என்றும் கூறின அப்படிப்பட்டவரினது அபிப்பிராயப்படியே தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்டவரையில், வேவல் மாநாடும் நடக்கிறதானால் அதுவும் தாழ்த்தப்பட்ட மக்களின் சட்டசபைப் பிரதிநிதிகள் 100க்கு 95 பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் ஸ்தாபனத்தின் மூலம் வராமல் காங்கரசின் பேராலேயே காங்கரஸ்காரர்களாகவே தேர்வோட்டவர்களாகவே வந்திருந்தும் அம்பேத்கார் பிரதிநிதித்துவத்தைப் பற்றி ஒரு பேச்சுக்கூட பேசாமல் லீக்கை மாத்திரம் காங்கரஸ் தலைவர்கள் குறைகூறி ஜின்னா சாயபுவைத் திட்டுவதென்றால் இதற்கு ஏதாவது புத்தியோ, நீதியோ இருப்பதாகச் சொல்லமுடியுமா என்று கேட்கிறோம்.

அன்றியும், முஸ்லிம் லீக், காங்கரசால் ஒரு அரசியல் சபையாகவே ஒப்புக்கொள்ளப்பட்டு அதற்குத் தனித் தொகுதி முதல் தனிப் பிரதிநிதித்துவம்வரை காங்கரசின் சம்மதத்தின் மீதே கொடுக்கப்பட்டு அது ஏகபோகமாய் முஸ்லிம்களால் அனுபவிக்கப்பட்டு வருகையில் ஆட்களை சிபார்சு செய்யும் பாத்தியம், காங்கரசுக்கு, தனக்கும்வேண்டுமென்றால் இதைக் குறும்பு என்று சொல்லாமல் வேறு என்னென்று சொல்வது என்பதாக நமக்கு விளங்கவில்லை.

நாளைக்கு எலக்ஷன் நடந்தோ எலக்ஷன் நடக்காமலோ மாகாணங்களில் கலப்பு மந்திரிசபை ஏற்பட்டால் முஸ்லிம்களுக்கு ஆக மந்திரிகளை யார் சிபார்சு செய்வது என்று யோசித்தால் இது விளங்கிவிடும். அதுபோல்தானே மத்திய மந்திரிசபையும் ஆகும். இடைக்கால ஏற்பாடு என்றாலும் அபேட்சை லட்சியத்தை ஒட்டித்தானே இது கையாளப்படுவதாகும்.

முஸ்லிம்களுக்குப் பிரதிநிதியாக மந்திரி சபையில் ஜனாப்கள் உபயதுல்லா சாயபு, ரஹ்மான் சாயபு ஆகியவர்கள் வருவதை முஸ்லிம்கள் ஒப்புக் கொள்ளுவார்களா? ஜனாப் உபயதுல்லா சாயபு தமிழ்நாட்டு ராஷ்டிரபதியாவார்; சட்டப்படி காங்கரஸ்காரர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர். தமிழ்நாடு ராஷ்ட்டிரிய சர்வாதிகாரியாகவும் இருந்தார். ரஹ்மான் காங்கரஸ் வீரராவார். அதனா

ராஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

லேயே முஸ்லிம் பிரதிநிதித்துவம் காங்கிரசுக்கு அளிக்கப்பட்டு விடுமா? அளிப்பது யோக்கியமாகுமா?

காங்கிரஸ் இந்தப் (முஸ்லிம்களுக்கு ஆகவும்) பிரதிநிதித்துவம் கொண்டாடுவது ஒரு தந்திரத்துக்கும், ஒரு மோசடிக்கும் அல்லாமல் ஒரு நேர்மைக்கு ஆக இருக்க முடியும் என்று யார்தான் கருதமுடியும்?

தமிழ்நாட்டில் ஆரியர் திராவிடர் (பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதவர்) தகராறு அரசியலில் 30-ஆண்டு காலமாக இருக்கிறது. பார்ப்பனரல்லாத கட்சியை (ஜஸ்டிஸ் கட்சியை) சக்தி ஒழித்துவிட்டதாகப் பார்ப்பனர்களும், சில பார்ப்பனரல்லாதார்களும் கூப்பாடு போடுகிறார்கள். யோக்கியதைக்கு சாட்சி அல்லது ஆதாரம் என்ன என்றால், பெரியவர்கள் காமராஜ நாடார் தலைவர், அண்ணாமலை பிள்ளை காரியதரிசி, சி. பி. சுப்பையா முக்கிய காரியதரிசி, சர்தார் வேதரத்தினம் பிள்ளை சர்வாதிகாரி, இன்னும் இப்படித்தானே காங்கிரஸ் கட்சி ஸ்தாபனம் இருக்க முடிகிறது என்பதோடு இப்படித்தானே பிரதிநிதித்துவத் தன்மையுமிருக்கிறது. இவர்களுக்குப் பணக்காரர் என்று சொல்லும்படியான பணம் இல்லையென்றோ பெரிய பதவி என்று சொல்லும்படியான வக்கீல், டாக்டர், இன்ஷூரன்ஸ் ஏஜன்சி இல்லை என்றோ நாம் சொல்லவரவில்லை. ஆனால் ஆரியர்களின் (பார்ப்பனர்களின்) காங்கிரஸ் தலைவர்கள் இப்படியா? இப்படிப்பட்டவர்களா பதவியில் இருக்கிறார்கள் என்று பார்த்தால் கட்சியில் ஸ்தானம் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஆள்களில் பார்ப்பனர்களின் பேரு என்ன திராவிடர்களின் பேரு என்ன என்று விளக்குவதற்கு ஆகவே இதைக் குறிப்பிடுகிறோம்.

ஆந்திர நாட்டை எடுத்துக்கொண்டால் ஒரு சாயபைக்கூட காங்கிரசில் பிரபலமாகக் காணவில்லை. ஒரு புலுசு, ஒரு பிரகாசம், ஒரு கொண்டா, ஒரு பட்டாபி, ஒரு கிரி இவர்கள் தானே தவிர இவர்கள் பெயர்கள், இவர்கள் பேச்சுகள், இவர்கள் அறிக்கைகள், இவர்களுக்குக் காங்கிரஸ் ராஷ்டிரபதியார் அழைப்புகள் ஆகியவைகள் தானே தவிர, தேசமுக்கள், கோபால் ரெட்டிகள், குஞ்சா ரெட்டிகள்.... பெயர்கள் எங்கே இருக்கின்றன? இதுதான் "ஜஸ்டிஸ் கட்சியைக் கொன்று" விட்டபிறகும் திராவிடர்களுக்கும் காங்கிரஸ்தான் பிரதிநிதித்துவம் என்பதற்கும் அறிகுறியா என்று கேட்பதோடு, இப்படிப்பட்ட மேலே குறிப்பிட்ட முஸ்லிம்கள் தவிர வேறு முஸ்லிம்கள் நிர்வாகத்தில் இல்லாத ஸ்தாபனம் தான் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதி ஸ்தாபனமா என்று கேட்கிறோம்.

இப்படிப்பட்ட 2 சாயபுகளையும், இப்படிப்பட்ட 4 திராவிடர்களையும் காங்கிரசில் சேர்த்துக் கொண்டு இருப்பதால் இந்த இரண்டு கட்சிகளும் காங்கிரசின் பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமா? என்று கேட்கிறோம்.

'முஸ்லிம் லீக்கில் இல்லாத முஸ்லிம்களைக் காங்கிரஸ் காப்பாற்ற வேண்டாமா? கைவிடலாமா?' என்று காங்கிரஸ் பிரமுகர்கள் பேசுகிறார்கள். முஸ்லிம் லீக்கில் முஸ்லிம் சேராமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று காங்கிரஸ் தான் பதில் சொல்லட்டுமே பார்ப்போம்.

காங்கிரசின் மூலம் வாழ்க்கை நடத்தலாம், பதவி பெறலாம், பெருமை பெறலாம், விளம்பரம் தொண்டு பெறலாம் என்பதல்லாமல் வேறு என்ன காரியம் முஸ்லிம் லீக்கில் இல்லாதது காங்கிரசில் இருக்கிறது என்று ராஷ்டிரபதி ஆசாதோ, மாகாண ராஷ்டிரபதி உபயதுல்லாவோ சொல்லட்டும்! என்றும் கேட்கிறோம்.

ஆகவே, ஜின்னா அவர்கள் 'முஸ்லிம்களுக்கு லீக்தான் எஜமானே ஒழிய காங்கிரஸ் அல்ல' என்று சொன்னது ஒரு சாதாரணமான அறிவாளிகூட ஒப்புக்கொள்ளக் கூடியதேயாகும். இதில் சிறிதாவது வழுவழா என்று ஜின்னா இருந்திருப்பாரானால் லீக்கு ஜின்னா கேடு செய்தவரே ஆகி இருப்பார்.

ஜின்னா அவர்களைப் பார்த்து மற்ற வகுப்பாரும் இனத்தாரும் புத்தி படித்துக்கொள்ளவேண்டுமே ஒழிய அவரை வைவது கூடாது என்பது நமது ஆசை.

ஜின்னா சாயபையோ முஸ்லிம்களையோ மற்றவர்கள் அறிவில்லாதவர்கள் என்றோ முட்டாள்கள் என்றோ சொல்லுவதானாலும் சொல்லிக் கொண்டு போகட்டும். ஆனால் அவர்கள் தான் ஆளத் தகுந்தவர்கள் நாட்டில் மானத்தோடு இருக்கத் தகுதியுடையவர்கள் என்போம். அவர்களது ஆட்சி

# திராவிடர் கழகத்திற்கு
## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

**21-7-45ந் தேதி வரை 33597 அங்கத்தினர்கள் ரூ. 3351—6—0 சந்தா**

ஜூலை மாதம் 21-ந் தேதி வரை திராவிட கழகத்திற்கு (ஜஸ்டிஸ் கட்சிக்கு) தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வருவான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 6008 | 9. சென்னை | 1822 |
| 2 தஞ்சை | 6958 | 10. மதுரை | 1481 |
| 3. சேலம் | 4579 | 11. செங்கல்பட்டு | 900 |
| 4. திருச்சி | 4018 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சில்நாடு) | 216 |
| 5. இராமநாதபுரம் | 2318 | 13. பெங்களூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2270 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென் ஆற்காடு | 1919 | | |
| 8. வட ஆற்காடு | 1844 | | |

**ஆகமொத்த அங்கத்தினர்கள் 33597. சந்தா ரூ 3351-6-0**

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

முறையும் மானத்தன்மையும் மற்றவர்களுக்கு எப்படியேனும் காணாதும் படவாம். அது இது மாகவேண்டுமானாலும் இருக்கட்டும். "எங்கள் வீட்டிற்கு நான் எஜமான், எங்கள் மக்களுக்கு நான் தலைவன்" என்று குடும்பத் தலைவன் சொல்லுவதை எந்த அறிவாளியும் குறைகூற முடியாது. இந்தத் தத்துவம் ஒப்புக்கொள்ளும் வரையிலும் நாட்டில் சாந்தமோ சமாதானமோ நிலைபெறாது என்பதோடு அன்னியனும் இந்தத் தேசத்தை, இந்த நாட்டை; இந்த மாகாணத்தை ஆதிக்கம் செலுத்துவதையோ, சுரண்டுவதையோ விட்டுவிட்டுப் போகமாட்டான்.

இனிமேலாவது என்ன நடக்குமென்று சிந்தித்தால், லேவர் மாநாடு முடிந்ததன் பலனாய் காங்கிரஸ்காரர்கள் மறுபடியும் பழைய குற்றத்திற்கு ஆக ஜெயிலுக்கு அனுப்பப்பட மாட்டார்கள்; இது உறுதி. ஏனென்றால் மாநாட்டுச் சாக்கை வைத்துக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் சர்க்காருக்கு ஒரு வாக்குறுதி பத்திரம் கொடுத்து விட்டார்கள். அதாவது 'யுத்தத்திற்கு எதிர்ப்புச் செய்வதில்லை, யுத்த உதவிக்கு ஒத்துழைக்கின்றோம்' என்று சொல்லிவிட்டார்கள். காங்கிரஸ்காரர்களை ஜெயிலுக்கு அனுப்பக் காரணமாய் இருந்த குற்றம் இதுவே. ஆனதால் இதை இனிமேல் செய்வதில்லை என்று வாக்குக் கொடுத்துவிட்டதால் சர்க்கார் இவர்களை ஜெயிலுக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டதோடு இவர்களுக்கு உதவி செய்யவேண்டிய அவசியமும் சர்க்காருக்கு ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், இவர்களைக் கொண்டு முஸ்லிம் லீக்கையும், திராவிட (ஜஸ்டிஸ்) கட்சியையும், நியாயமான பொது உடைமைக்காரர்கள் யாராவது இருந்தால் அவர்களையும் அடக்க வேலை வாங்கவேண்டி இருக்கிறது.

நேரு அவர்கள் ஏதேதோ வீண் பேச்சுக்கள் ஆவேசமாய்ப் பேசுகிறதாக விளம்பரம் வருகிறது. அவருக்குத் தனது தோல்வியையும், தான் பத்திரம் கொடுத்து வெளியில் வந்ததையும் மறைக்க வேண்டிய அவசியம் இருப்பதால் சர்க்காருக்கும், யுத்த முயற்சிக்கும் விரோதமில்லாமல் பேசி வீரராகவேண்டி இருக்கிறது. அவர் பேச்சுக்களைப் பார்த்தால் அவர் மூளையில் ஏதோ (உண்மையாகவே) கோளாறு ஏற்பட்டுவிட்டதாகவே தெரிகிறது. அவர் பேசுவது அவருக்கே விளங்காதவை எல்லாத் துறைகளையும் பற்றிப் பேசுகிறார். "நேரு வீரராய் இருந்தால்" ஆகஸ்ட்டு கலவரங்களுக்கு வெட்கப்படுகிறேன். அப்படி செய்தவர்களைக் கண்டிக்கிறேன், அவ்வது அவை சரியான காரியமல்ல." என்றாவது சொல்லவேண்டும்; அப்படிக்கு இல்லாமல் ஜனங்களுக்கு வேட்டை கெடுதிக்கு ஒரு சிறிதும்கூட சர்க்காருக்குத் தொந்திரவு ஏற்படாமல் அவர்களுக்கு நல்ல பேரும், தங்களுக்குக் கெட்ட பேரும் ஏற்படும்படியான சேதிக்கு இவர் மகிழ்வதும், பாராட்டுவதும், குற்றம் சொல்லுபவர்களை, கோழைகள் என்று சொல்லுவதும் எப்படி வீரமாகும்? நேரு அவர்களுக்கு வீரமிருந்தால், தான் முன்பு சொன்னதை இப்போது சொல்லவேண்டும். அதாவது "சண்டைக்கு ஒத்துழைக்காதே இந்தியாவை விட்டுப் போ, பொது ஜனங்களே சர்க்காருக்கு அடங்கி நடக்காதீர்கள். பட்டாளத்துக்குப் போகாதீர்கள்" என்று சொல்லவேண்டும். அப்பொழுது தேசத் தலைவர் இவர் வீரர். வைஸிராயிடம் ரகசியம் பேசிவிட்டு வந்ததை வெளியிட முடியாது என்று சொல்லிவிட்டு மக்களுக்கு துன்பம் ஏற்பட்ட காலித்தனத்தை புகழ்ந்துகொண்டு காக்காய் குருவி இடம் பேசப்போகிறேன்; பஞ்சத்தைத் தீர்க்கப் போகிறேன் என்பவைகள் வெறும் சிறுபிள்ளை வீரம் வம்போடு வெறியா வீரம் என்றும் சொல்லலாம்.

37-ம் வருட தேர்தல் வெற்றியில் இதே நேரு அவர்கள் கூட்டு மந்திரிசபை பேச்சு வந்தபோது "வேறு கட்சி யாரோடு ராஜிசெய்துகொண்டு பதவியில் நிர்வாகத்தில் இருப்பதைவிட 100 வருஷத்திற்கு சுயராஜ்யம் இல்லாவிட்டாலும் மேலாகும்" என்று சொன்னவருக்கு, ஜெயிலில் இருந்து விடுதலை ஆனவுடன் வைசிராய் இடமும், ஜின்னாவிடமும் வேலை என்ன என்று கேட்கிறோம். இவரது எலக்ஷன் வெற்றியும், ஜனசபையும், இந்தியாவின் காங்கரசின் ஏகப்பிரதிநிதித்துவமும் என்ன ஆயிற்று?, எங்கே போயிற்று?, என்று கேட்கிறோம். கப்சா, காலித்தனம், மானமற்ற தன்மை, பித்தலாட்டம், இரகசிய மன்னிப்பு முதலியவை எவ்வளவு நாளைக்கு மக்களை ஏமாற்ற முடியும்?

எனவே, இந்தமாதிரியான பித்தலாட்ட நாடகத்தில் ஏமாறுதலில் இருந்து இனி எந்தக் காரணத்தைக் கொண்டாலும் திராவிட மக்கள் தப்பித்து வெளிவந்துதான் ஆகவேண்டும். திராவிடநாட்டை சுதந்திர நாடாக, மானமுள்ள நாடாக, வெளியான் சுரண்டாத நாடாக ஆக்கிக்கொள்ள திராவிடர்கள் யாவரும் ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டியதுதான் இனி திராவிட மக்கள் கடமையாகும்.

தென்னாட்டுப் பார்ப்பன மக்களும் இந்தச் சமயம் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சொன்னதைச் சற்று யோசிக்க வேண்டும். ஜின்னாவுக்கும் காந்திக்கும், அல்லது இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தகராறு இருந்தால் திராவிட நாட்டவனுக்கு என் கவலையும் தொல்லையும் இருக்க வேண்டும்?, என்பது ஆக தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் கேட்பதோடு, இனி நம் வேலையை நாமே தென்னாட்டவர்களே பார்த்துக்கொள்ளலாம் என்கிறார். இது எவ்வளவு சரியான யாவருக்கும் அறிவு விளக்கத்துக் கேதுவாகும். இந்தக் கேள்வி நம் ராஜாக்களுக்கும், சர்களுக்கும் அவர்கள் திராவிடர்களாக இருந்தாலும் கேட்கவே தோன்றாது. தோன்றினாலும் கேட்க மனம் வாராது. ஏனெனில், அவ்வளவு புத்தியோ அல்லது கவலையோ இருக்க நியாயமில்லை. எப்படியாவது பர்மாவிலும் பம்பாயிலும் பணம் சம்பாதிக்கலாமா? சிம்லாவிலும், சீமையிலும் வேலை சம்பாதிக்கலாமா? சமஸ்தானங்களில் வைஸ்ராய்களாகலாமா? என்றநினைவு அவர்கள் புத்தியைமறைத்துவிடும். ஆச்சாரியார் அனித்து சொல்லி

விட்டார். இது அவர் சொல்லியிருந்தாலும் சரி, வேறு ஒருவர் சொல்லச் செய்திருந்தாலும் சரி, நமக்குக் கவலை இல்லை; நாமும் அதையே சொல்லுகிறோம். இந்துஸ்தான், பாகிஸ்தான், சீக்கிஸ்தான், ஆதிதிராவிடஸ்தான், பார்சிஸ்தான் பற்றி நமக்கு அதிக கவலை வேண்டியதில்லை. நமக்கு வேண்டியது திராவிடநாடு. ஆந்திரமும், கன்னடமும், மலையாளமும் (ஆட்சேபிக்கவில்லை) ஆட்சேபித்தாலும் சரி, இவர்களும் சேர்ந்த திராவிடநாடு ஆனாலும் சரி அதுதான் வேண்டும். நம்மிடம் சீக்கியரும் இல்லை, பார்சியருமில்லை, இந்தியருமில்லை, தாழ்த்தப்பட்டவருமில்லை. அவரவர் வழக்கவழக்க சமுதாயம் எப்படி இருந்தாலும் சரி முதலில் நம் நாட்டு எல்லையின் ஆதிக்கத்தையும் அன்னியர் (வடநாட்டான் உள்பட) கரங்களிலிருந்து தப்புவதையுமே நாடுகிறோம். இதில் அதாவது இந்த நம் நாட்டில் பார்ப்பனர்களோ முஸ்லிம்களோ தாழ்த்தப்பட்டவர்களோ, சீக்கியரோ, பார்சியோ இருந்தால் அவர்களுங்கூட கவலைப்பட இடமே இல்லை. இதுதான் ஆச்சாரியாரின் எண்ணமுமாகும். அந்த எண்ணத்தில் நம்மை ஏய்க்கும்படியான, கெடுக்கும்படியான கருத்து இருக்கமுடியாது; இருந்தாலும் நடக்க இடமிருக்காது. நாளைக்கு அவர் மாறிவிடுவாரோ என்று பயப்படத் தேவை இல்லை. மாறினால்தான் பயமென்ன? நம்மில் மாறினவர் எத்தனை பேர்? காணம் போட்டவர்கள் எத்தனை பேர்? ஏமாற்றியவர்கள் எத்தனை பேர்? சதி செய்தவர்கள் எத்தனை பேர்? சதி செய்யவே நம்மோடு நல்ல பிள்ளைகளாய் நடந்துகொண்டு இருப்பவர்கள் எத்தனை பேர்? நம்மால் வயிறுவளர்த்து எதிரிகளுக்கு கூலிகளாய் இருப்பவர்கள் எத்தனை பேர்? இவற்றாலெல்லாம் நம்நிலை எதில் குறைந்தது? எதில் தேய்ந்தது? எதில் தோற்றது? இவ்வளவையும் சமாளித்து இயக்கமும் கொள்கையும் திட்டமும் வளரவில்லையா?

ஆதலால், தென்னாட்டு (திராவிடநாட்டு) தனித்தன்மையை எவ் [illegible]

யது நமது கடமையாகும். முஸ்லிம் தோழர்களுக்கும் இதில் அபிப்பிராயபேதம் இருக்க முடியாது!

பாகிஸ்தான் உலக முஸ்லிம் இயக்கம், அது உலகமுஸ்லிம்களும் ஒத்துழைக்கவும், முஸ்லிம் அல்லாவிட்டாலும், முஸ்லிம் அபிமானிகள் தோள் கொடுக்கவும் ஆன இயக்கமே—பிரச்சினையே தவிர திராவிட நாட்டு முஸ்லிம்களுக்கு ஒரு உள் நாட்டுப் பிரச்சினை அல்ல. திராவிட நாட்டுப் பிரச்சினையை ஒப்புக்கொண்ட திராவிட நாட்டு முஸ்லிம்கள் எல்லோருக்கும் திராவிட நாட்டுப் பிரச்சினை அவர்களது உள்நாட்டுப் பிரச்சினையேயாகும். ஆதலால் அவர்களும் இதில் முக்கிய கவலை செலுத்தவேண்டியவர்களே ஆவார்கள். இனி திராவிட நாடு அல்லது தமிழ் நாடு முஸ்லிம் லீக்கின் திராவிட நாடு பிரச்சினை பற்றிய கருத்து என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டியது அவசரமாகும். அதுபோலவே இந்திய அல்லது வெளிதேசத்துக் கட்சிகளுமேயாகும். பொதுவுடைமைக் கட்சியும், இந்து மகாசபையும், காங்கிரசும், தாழ்த்தப்பட்ட மக்கள் கட்சியும் எந்த வெளி மாகாணக் கட்சி கூட்டுறவும் இதற்கு ஆதரவு—இந்தக் கொள்கைக்குத்தான் நம் தொண்டை ஏற்றுக்கொள்ளத் தக்கவைகளாகும் என்போம். எனவே நாம் (திராவிட மக்கள்) இவைகளை நன்றாய் சிந்தித்து ஒரு முயற்சிக்கு சீக்கிரம் வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

## சரியாய் போய்விட்டது

சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் 'மதத்தைப் பற்றிப் பேசக்கூடாதென்றும்' தாம் ஒரு இந்து என்றும், நீட்டென்று கூறிக்கொண்டதுடன் திராவிட நாட்டுப் பிரச்சினையை கைவிட்டுவிட்டு அதைப் பரிகாசம் செய்ய வந்ததும், கிடைக்கப்போவதில்லை என்று பந்தயங்கட்ட முனைந்ததும், ஒரு ஏதேச சமஸ்தானத்தில் வேலை பார்ப்பதற்கு ஆசைத்தான் என்பது ஆச 'குடி அரசு' குறிப்பு காட்டி இருந்தது [illegible]

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் ஈ. வெ. ராமசாமி தோழர்கள் ஜனார்த்தனம், மணி ஆகியவர்கள் சென்ற வாரம் 12-ந் தேதி புறப்பட்டு ஆந்திர சுற்றுப் பிரயாணம் சென்று 3, 4 சொற்பொழிவாற்றிவிட்டு 18-ந் தேதி ஈரோடு வந்துசேர்ந்தார்கள்.

இப்போது மறுபடியும் 19-ந் தேதி இரவு புறப்பட்டு சேலம் புதுச்சேரி முதலிய ஊர்களுக்குச் சென்றுவிட்டு 26-ந் தேதி வாக்கில் ஈரோடு திரும்புவார்.

---

கர்கள் அறிந்ததாகும். இப்போது அது பெரிதும் சரியாய்விட்டது என்று சொல்லத்தக்கவண்ணம் அவருக்கு ஒரு பெரிய 'பிளாஸ்' அடித்துவிட்டது. அதாவது இந்தியாவில் உள்ள எல்லா சமஸ்தானங்களுக்கும் யோசனை சொல்லுபவராக ஆகிவிட்டார். ஏதாவது "ஒரு சமஸ்தானத்திற்கு" என்று குறிப்பிட்டது தவறி எல்லா சமஸ்தானத்திற்கு என்று ஆனது குறித்த நம் "ஜோசியம்" ஒரு அளவுக்கு தவறி விட்டாலும் செட்டியார் பெருமைக்கு நாம் பாராட்டுவதோடு மகிழ்ச்சியோடு வாழ்த்துக் கூறுகிறோம். அதுபோலவே மற்றொரு சர், சர் பி. டி. ராஜன் அவர்களுக்கும் ஒரு 'பிளாஸ்' அடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். சமீபத்தில் அடித்தாலும் அடிக்கலாம். நமது ஹோப் குவர மகனார் 'ஹோப்' கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. சர் பி. டி. ராஜனுக்கு "ஜே" (வெற்றி உண்டாவதாக).

## கோவை ஜில்லா திராவிடர் கழகம் ஈரோடு

### ஈரோட்டில் மாநாடு

மேற்படி கழக இரண்டாவது மாநாடு ஈரோடு சரஸ்வதி ஹாலில் ஆகஸ்டு முதல் வாரத்தில் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாதுரை எம். ஏ., சு. கி. ஜனார்த்தனம் எம். ஏ., முதலியவர்கள் கலந்துகொள்வார்கள்.

P. பழனிச்சாமி, S. R. சந்தானம்,
காரியதரிசிகள்.

## சேலம் ஜில்லா தெ. இ. ந. உ. சங்க அங்கத்தினர்களின் பொதுக் கூட்டம்

29-7-45 ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில் சேலம் ஜில்லா தென்னிந்திய நல உரிமைச் சங்க அங்கத்தினர்களின் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரை மாற்றி திராவிடர் கழகம் எனத் திருத்தி அமைக்கவும், நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கவும் வேண்டியிருப்பதால் இதனையே அழைப்பாகக் கொண்டு எல்லா அங்கத்தினர்களும் தவறாமல் வரவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஜி. பி. சோமசுந்தரம், தலைவர்.
பி. ஆர். சோமசுந்தரம், செயலாளர்.

## பொன்மலை திராவிட வாலிபர் கழகம்

### 5-வது ஆண்டு நிறைவு விழா

28-7-45 சனி மாலை 7 மணிக்கு திராவிட வாலிபர் கழகத் தோட்டத்தில் நடைபெறும்.

தலைவர்: இளைய குமார பட்டக்காரர் ந. அர்ச்சுனன்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி, தளபதி சி. என். அண்ணாதுரை, ஈ. வெ. கி. சம்பத், வீரமணி மற்றும் பல தோழர்கள் பேசுவார்கள்.

அன்று இரவு 10 மணிக்கு தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் எழுதிய "அவன் பித்தனா" என்ற நாடகம் திராவிட வாலிபர்களால் நடித்துக் காண்பிக்கப்படும்.

ஒலிபெருக்கி உண்டு.

## நாகை திராவிட நடிகர் கழகம்

புதுச்சேரியில் நடந்துவரும் நாகை திராவிட நடிகர் கழகத்தாருக்கு முதலியார்பேட்டை அரிமென்டு தோழர் சுப்பையா அவர்களால் 8-7-45-ந் தேதி ஒரு விருந்தளிக்கப்பட்டது.

## அறிவிப்பு

P. M. S. சுப்பையா பிரதர்ஸ் புரோப்ரைட்டர் P. M. S. ஆறுமுகம் அவர்களை 21-7-45 முதல் திருநெல்வேலி பகுதிக்கு நமது ஏஜண்டாக நியமித்துள்ளோம். 'குடி அரசு' அவரிடம் பெற்றுக் கொள்ளவும்.

மானேஜர்.

## ஈரோட்டில் உமர்புலவர் நினைவு நாள்

ஈரோடு சேத்தி! தொண்டர் படை செயற்குழு கமிட்டியாரால் முஸ்லிம் கவி வள்ளல் உமர்புலவர், சீதக்காதி நினைவு நாள் 28-7-45-ந் தேதி இரவு 10 மணிக்கு ஈரோடு டிஸ்டிரிக் முன்சிப் ஜனாப் எம். எஸ். அப்துல் அஜீஸ் அவர்கள் தலைமையில் அற்புதமான ஒலிபெருக்கி அமைக்கப்பட்ட அழகிய அலங்காரப் பந்தலில் நடைபெறும். அதுசமயம் தோழர் சி. என். அண்ணாதுரை, சித்தரன் நைனா முகமது, பண்டிட் ஜெயவாணி, திருப்பூர் எ. எம். மைதீன் ஆகியவர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள். மற்றும் புரட்சிக்கவி பாரதிதாசனும், தோழர் கே. வி. அழகிரிசாமி ஆகியவர்களும் கலந்துகொள்வார்கள். அதே ஒலிபெருக்கி அமைக்கப்பட்ட பந்தலில் 19-7-45-ந் தேதி பிற்பகல் 3 மணிக்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். வெளியூர் திராவிட முஸ்லிம்கள் இதனையே அழைப்பாகக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

M. S. அப்துல் அஹரப்,
A. K. ஜக்கிரியா,
காரியதரிசிகள்.

## புரட்சிக்கவிக்குப் பணமுடிப்பு

மச்சபாம் திராவிட இளைஞர் முன்னேற்ற சங்க ஆதரவில் தோழர் காளைப்பாண்டிய தேவர் தலைமையில் தோழர் சி. என். அண்ணாதுரை, கவி பாரதிதாசன், பண்டிதர் பாலசுந்தரம் அவர்கள் திராவிடநாடு பிரச்சினை விஷயமாய் பேசினார்கள். கவி பாரதிதாசனுக்கு ஷை சங்கத்தின் சார்பாக ரூ. 51 (ரூபாய் ஐம்பத்தொன்று) பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

## சேலம் சுயமரியாதைச் சங்கம்

ஷை சங்கத்திற்கு 12-7-45-ந் தேதி வரை 201 அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கின்றனர் என்று ஷை சங்கக் காரியதரிசி தோழர் எம். பி. சுப்ரமணியம் தெரிவிக்கிறார்.

## வேண்டுகோள்

கொழும்பு, கொள்ளுப்பிட்டித் தோழர் ந. ஆ. ஆ. கடவன் இலங்கைத் தோழர்களுக்கு 'பாரதிதாசன் கவிதைத்' [illegible] வேண்டுமென்று விரும்புகிறார்.

## திருச்சி சுயமரியாதைச் சங்கம்

சென்ற 8-7-45-ந் தேதி மாலை 6½ க்கு திருச்சி ஒய். எம். டி. எ. சங்கக் கட்டிடத்தில் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் திருச்சி சுயமரியாதைத் தோழர்களின் கூட்டமொன்று கூடியது. அதுசமயம் திருச்சி ஜில்லா சுயமரியாதை சங்கம் ஆரம்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. ஷை சங்கத்துக்கு தலைவராக தோழர் தி. பொ. வேதாசலம் அவர்களும் உபதலைவர்களாக தோழர்கள் சீரங்கம் துரைசாமி, என். சங்கரன் ஆகியவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் 21-பேர்களடங்கிய ஒரு நிர்வாக குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. சங்கத்திற்கு அங்கத்தினர்கள் சேர்த்து தீவிரமாக பிரச்சாரம் செய்வதென பேசப்பட்டு இரவு 8 மணிக்கு தோழர் பிரான்சிஸ் நன்றிகூற, கூட்டம் இனிது முடிவுற்றது.

## தோழர் எஸ். எஸ். கலியாணசுந்தரத்துக்குப் பட்டம்

குடந்தை தோழர் எஸ். எஸ். கலியாணசுந்தர தேசிகர் அவர்கள் தமிழ்ப்பாட்டுகள் பாடுவதில் சிறந்தவர். அதிலும் புரட்சிக்கவி பாரதிதாசன் கவிதைகளை அழகாகப் பாடுவார்.

குடவாசல் பெருநிலக் கிழவர் தோழர் கே. குஞ்சிதபாதம்பிள்ளை அவர்கள் புதல்வர் தோழர் கு. செல்வ[illegible]க்கும் தோழர் மறைமலையடிகள் தலைமையில் நடந்த திருமணத்தின்போது, தோழர் பாரதிதாசன் பாடல்களை இனிது பாடியதை முன்னிட்டு மறைமலையடிகள் "தமிழிசை நம்பி" என்ற பட்டத்தை வழங்கினார்.

## சேலம் திராவிடர் கழகம்

திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினராகச் சேர விரும்புவோர் சேலம், செவ்வாய்ப்பேட்டை சு. ம. சங்கக் காரியதரிசி தோழர் எம். பி. சுப்ரமணியம், சேலம் [illegible] பேட்டை தோழர் கே. கொண்டய்யாவிடமும் உள்ள அங்கத்தினர் புஸ்தகத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

## 'வைத்திய நிதி' பட்டம்

சித்த வைத்திய முறையில் ஆராய்ச்சி செய்து வரும் தோழர் பி. கோவிந்த பிள்ளைக்கு "வைத்திய நிதி" என்ற பட்டம் மதுரை சித்தாந்த வைத்திய மாநாட்டுத் தலைவர் தோழர் எஸ். ஜி. சுந்தரம் பிள்ளை அவர்களால் கும்பகோணத்தில் நடந்த கூட்டத்தில் அளிக்கப்பட்டது.

# வாணியம்பாடி கிழக்கு திராவிடர் கழகம்

## வருடாந்திர அறிக்கை

அன்புமிக்கத் தோழர்களே! நமது பெரும் திராவிட இயக்கம் என்னும் பேரொளி கிளம்பும் முன்பே, ஏழு வருட காலமாக (மத்தியில் 2 வருஷம் நீங்கலாக) இக்காதர்பேட்டையில் திராவிட கழகம் என்னும் பெயரால் நடைபெற்று வருகிறது. நடந்த வருஷங்களைவிட இவ்விரண்டு ஆண்டுகள் ஏறக்குறைய கழக விதிப்படி நடந்துவந்திருக்கிறது. மேலும் சுற்றுப்புறக் கிராமங்கள், பத்து மைல்களுக்கு அப்பாலுங்கூட மக்கள் மனதில் திராவிட கழகம் என்னும் பெயர் பதியப்பட்டுவிட்டதென்பதைக்காண கழக மெம்பர்களின் மனது பூரிப்படையாமல் இருக்க முடியாது. இக்கழகமானது பெரியாரின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு மாற்றானுக்கு இடம் கொடாமல் தலைவரின் கட்டளையைத் தலைமேல்கொண்டும் அஞ்சாது நடத்திவரும் இப்படிப்பட்ட நமது கழகம் இன்னும் பல முக்கிய காரியங்களை மக்களுக்குச் செய்து வருகின்றது.

அவையாவது:-

1. பல அரசியல் கட்சிக்காரர்களும் தாராளமாய் வந்து கட்சி கொள்கைகளைப் பற்றியும் புராண இதிகாசங்களைப் பற்றியும் விவாதம் செய்து ஓர் முடிவுக்கு வர பூராவும் இடமளிக்கிறது. விவாதித்தும் விவாதத்தின் முடிவில் கழகக் கொள்கையை ஏற்று ஒத்துக் கொள்ளவும் செய்திருக்கிறது.

2. திராவிட கட்சி பத்திரிக்கைகளையும் எதிர்கட்சி பத்திரிக்கைகளையும் வரவழைத்து எல்லோரும் படித்து இன்புறச் செய்வதுடன் இக்காதர்பேட்டையிலேயே ஒரே ஒரு கழகம் தான் பொது வாசகசாலையாக இருக்கிறது.

3. நமது கழகமானது வாணியம்பாடி ரெயில்வேஸ்டேஷனுக்கும் முனிசிபல் பஸ் நிலையத்திற்கும் சமீபமாய் இருப்பதால் இராக்காலங்களில் பஸ் தவறியவர்களுக்கும் இரயில் தவறியவர்களுக்கும் இரயிலில் இறங்கி இராக்காலங்களில் தங்கள் கிராமங்களுக்குப் போகமுடியாமல் தவிப்பவர்களுக்கும் பாதுகாப்புடன் தங்கள் சொந்த வீடுபோல் தங்கவும் ஸ்நானம் செய்யவும் மலஜலம் கழிக்கவும் பேருதவி செய்கின்றது.

4. மிலிடரி உத்தியோகஸ்தர்களும், கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களும் வந்து தங்கவும் அவர்களுக்குரிய சௌகரியங்களைத் தங்கள் சொந்த ஆபீஸ் போல இரண்டொருநாள் இருந்தும் ஜமாபந்தி காலங்களிலும் முக்கிய சௌகரியமளித்திருக்கிறது.

5. பிரபல டாக்டர் அப்துல்லா அவர்களின் நர்சிங்ஹோமுக்கு வைத்தியத்திற்காக வருபவர்களுக்கு இடமில்லாமல் போனால் இடம் கிடைக்கும் வரைக்கும் கழகத்திலிருந்து செல்பவர்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பலவகைகளில் சௌகரியமடைய செய்திருக்கிறதென்பதை நாம் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆகவே, இவ்விரண்டுவருட காலத்தில் அடியில் கண்ட மெம்பர்களால் நன்கொடை, சந்தா இவைகளின் மூலமாய் வரவு வந்த தொகையிலிருந்து, சிக்கனமாயும் அவசியமானதாயும் உள்ள முக்கிய விஷயங்களுக்கும் செலவு செய்த விபரங்களையும் குறிக்கப்பட்டிருக்கிறது.

### வரவு விவரம்:

| | ரூபாய் |
|---|---|
| M. P. வடிவேலு | 45 |
| V. A. நடேசன் | 33 |
| A.E நாச்சியப்பகவுண்டர் B.A.B.L. | 30 |
| V. லோகநாதன் | 28¾ |
| S. சபாரத்தினம் | 20 |
| சி. ராமகிருஷ்ண செட்டியார் | 24 |
| K. துரைசாமி முதலியார் | 14¾ |
| V. இராமகிருஷ்ண நாயுடு | 14 |
| A. E. குப்புசாமிகவுண்டர் | 10 |
| D. திருக்குறளரசு | 8 |
| த. மு. தங்கவேல் முதலியார் | 7 |
| K. ஜயராமசெட்டியார் M.A.B.L. | 6 |
| D. சாமிநாதன் | 6½ |
| ஆப்பாவுகவுண்டர் | 5 |
| கோவிந்தசாமி செட்டியார் | 5 |
| S. P. சின்னத்தம்பிகவுண்டர் | 4 |
| அரிகேசவ முதலியார் | 2/10 |
| C. பழனிமுத்து | 3 |
| A. நாகராஜன் | 3 |
| T. முனிசாமி கவுண்டர் | 3 |
| R. சாமுண்டி சாமாராஜுநாயுடு | 3 |
| T. அப்பாதுரை முதலியார் | 3 |
| த. மு. ராஜகோபால் | 3 |
| H. S. ரங்கசாமி | 2 |
| நா. முனிசாமி | 2 |
| நா. முனிசாமி முதலியார் | 2 |
| D. நடராசன் | 1¾ |
| ராஜன் சோடாபாக்டரி | 8½ |
| முனிக்கண்ணு நாட்டார் | 1¾ |
| ஆறுமுக முதலியார் | 1½ |
| R. சின்னசாமி நாயுடு | 1 |
| T. A. கோவிந்தசாமி | 2 |
| சாமி பிள்ளை | 2 |
| துரைசாமி நாயுடு | 1 |
| மாணிக்கம் | 1 |
| V. ஏகாம்பர முதலியார் | 1 |
| R. ராமமூர்த்தி | 1 |
| K. C. அப்பாதுரை | 1/14 |
| சாமிநாத நாயக்கர் | 10 |

| | அணா |
|---|---|
| விஜயரங்கம் | 8 |
| கிருஷ்ணன் | 8 |
| M. காசி கவுண்டர் | 6 |
| M. சீனிவாசன் | 6 |
| M. இராமகிருஷ்ண நாயுடு | 6 |
| நடேச செட்டியார் | 4 |

| | ரூபாய் |
|---|---|
| சந்திரகாசன் | 1/2 |
| 11 பேர் 0–2–0 வீதம் | 1/6 |
| M. ராதாகிருஷ்ணன் | 10 |
| வாடகை வரவு | 73¾ |
| நியூஸ் பேப்பர் விக்கிரய வரவு | 8½ |
| | 413-10 |
| அபுருபம்மாள் வரவு அமானத்து | 60–0 |
| | 473-10 |

### (செலவு வகை)

| | |
|---|---|
| சந்தா ரசீது 700<br>லெட்டர் பேப்பர் 200 | 2½ |
| கழக பெயர் போர்ட் பலகை | 2 |
| பெஞ்ச் 4-க்கு | 26 |
| ஸ்டூல் 6-க்கு | 15 |
| டேபில் 1-க்கு | 9 |
| கூஜா ஸ்டாண்டு | 1½ |
| லெட்டர் ஸ்டாண்டு | 0-10 |
| ரப்பர் ஸ்டாம்பு 1-க்கு | 2½ |
| வாசல் கொட்டகை செலவு | 27/9 |
| படஸ்டாண்ட் 2-க்கு | 1 |
| பாய்கள் 11-க்கு | 13 |
| திருப்பத்தூர் கேசவலு மோகனம்மாள் கல்யாணத்தில் வாசித்தளித்த வாழ்த்துப்பத்திரச் செலவு | 6½ |
| குரோட்டன் செடிகள் | 8½ |
| பெஞ்சுகள் ஸ்டூல்களுக்கு வர்ணம் அடிக்க | 7 |
| மேஜை லைட் 1-க்கு | 2 |
| த. மு. த. ராஜகோபால் எம். எம். குழந்தை இவ்விருவரும் பார்ப்பனப் புரோகிதம் நீக்கி கல்யாணம் செய்துகொண்ட தற்காக அவர்களுக்கு அளித்த டீபார்ட்டி விருந்து செலவு | 10½ |
| டாக்டர் M. அப்துல்லா அவர்களுக்கு அளித்த தேநீர் விருந்து செலவு | 30/10 |
| குடியரசு பதிப்பகம் புஸ்தகங்கள் | 14½ |
| ஆரிய ஆட்சி இங்லீஷ் 1 தமிழ் 1, | ¾ |
| விடுதலை பத்திரிகை | 7/10 |
| டேபில் லைட் 1 | 4 |
| லாந்தர்(?) 1 | 2 |
| தினசரி, திராவிடநாடு, குடியரசு, திராவிடமணி, நகரதூதன், சண்டே அப்சர்வர், ஜஸ்டிஸ் வீக்லி, சமரசம், தமிழ் உலகம், பாரததேவி இவைகள் செலவு | 28¾ |

V. கலியாண சுந்தர முதலியார் எழுதிய புத்தகம் 10
கழக கட்டிட வாடகை 243/9

472/2

மேலும் இக்கழகம் விருத்தியடைய வேண்டுமானால் உங்களுடைய உதவி இன்றியமையாததாகும்.

கடந்த இரண்டு வருட காலத்தில் மெம்பர்களுடைய வரவு குறைவாயிருந்தாலும் செலவு வகைகளுக்குச் சரிகட்டாமல் அமானத்து கடன் வாங்கவேண்டியதாய் ஏற்பட்டதற்கு நீங்கள் வருந்துவீர்கள் என நினைக்கின்றேன். இன்னும் நமது கழகத்திற்குப் பத்திரிக்கைகள் தேவை இருப்பதுடன் பகுத்தறிவுப் புத்தகங்களும், சமூக சீர்திருத்த புத்தகங்களும் தேவை என்பதையும் நீங்கள் அறிவீர்கள். பத்திரிக்கைகளுக்கு ஒவ்வொரு வருட பணம் முன்னதாகக் கட்ட வேண்டி இருப்பதாலும் கழக கட்டிட வாடகையும் 1-வருட பணம் முன்னதாகக் கொடுக்கவேண்டி இருப்பதாலும் மொத்தத்தில் அமானத்து கொடுப்பதுடன் சேர்த்து குறைந்தது 300 ரூபாய், முதல் வசூல் ஆகவேண்டி இருப்பதால் தாராள மனதுடன் நன்கொடையளித்து நடப்பு ஆண்டில் கழகமானது நல்ல தொண்டுசெய்ய வசதியளிப்பீர்களென வணக்கமாய், கேட்டுக்கொண்டு இவ்வறிக்கையை உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்;

C. பழனிமுத்து,
செகரிட்டரி.

## பெரியார் திராவிடர் இளைஞர் கழகம்

அத்தக்குடி: 12-6-45ந் தேதி நடந்த பெரியார் திராவிடர் இளைஞர் இளைஞர் கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில் அயராது உழைத்து அருந்தமிழைச் சிறக்கவைத்த மாஜி காரியதரிசி தோழர் பி. மகராஜன் அவர்கள் படத்திறப்பு விழா நடத்த துரிதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதால், அது சமயம் அதாவது ஜூலை மாதக் கடைசியில் ஷை கழகத்தின் நான்காவது ஆண்டு பூர்த்திவிழாவை நடத்துவதென்றும் 10வயது வீரமணியை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பாண்டியன் பரிசு நன்கொடை

திண்டுக்கல் திராவிடர் கழக செயலாளர் தோழர் ஏ. வீராசாமி அவர்களால் ஈரோடு சுயமரியாதைச் சங்கத்தாருக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட பாண்டியன் பரிசு (பாரதிதாசன் எழுதியது) அன்புடன் வரப்பெற்றோம்,

காரியதரிசி.

## மதிப்புரைகள்:

### "புது உலகம்"

சென்னையிலிருந்து தோழர் டி. ஆர். நடராஜன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "புது உலகம்" என்னும் வார இதழ் ஒன்று வரப்பெற்றோம். இது தோழர் எம். என். ராய் கட்சியாகிய மக்கள் கட்சியின் தமிழ் வாரப் பத்திரிகை. அக்கட்சிக் கொள்கையை விளக்கி மக்கள் கட்சியைப் பலப்படுத்துவதும், சமூக விடுதலைக்காகப் பாடுபடுவதும் அதன் நோக்கம் என்று தெரிகிறது.

தனிப் பிரதி 0—1—6

### "மக்களின் கட்சி"

தமிழ் நாடு ராடிகல் டெமாக்ரடிக் கட்சியைப் பற்றிய விளக்கம் இந்நூலில் காணப்படுகிறது. இது தோழர் கே. கே. சின்ஹா அவர்களால் எழுதப்பட்டதின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஷை கட்சியைக் குறித்து விளக்கம் நாடுவோருக்கு இந்நூல் ஓரளவு உதவியாக இருக்கும்.

விலை அணா. 0-6-0

### ரூ. 13000 பூச்சாண்டி

தோழர் வி. பி. கார்னிக் அவர்களால் எழுதப்பட்டு தமிழ்நாடு ராடிகல் டெமாக்ரடிக் கட்சியினரால் வெளியிடப்பட்ட ஷை நூல் ஒன்று வரப்பெற்றோம். இந்தியாவில் பாசிசத்தை எதிர்த்து யுத்த நடவடிக்கைகளை ஆதரித்துப் பிரச்சாரம் செய்வதற்காக இந்தியத் தொழிலாளர் சம்மேளனத்துக்கு சர்க்கார் தரும் ரூ. 13000 கிராண்டைப் பற்றி நாட்டில் நடைபெற்றுவரும் விஷமப் பிரச்சாரத்திற்குத் தக்க பதில் இதில் காணக்கிடக்கிறது. இப்பிரச்சினையைக் குறித்த சந்தேகங்களை இந்நூல் நீக்கும் என்றே நம்புகின்றோம்.

விலை அணா 4.

இவைகள் கிடைக்குமிடம்:
77-B, ஹாரிங்ரோட், மௌண்ட் ரோட் போஸ்ட், சென்னை.

### "பண்டிட் ஆனந்தம் படம்"

திருச்சி தோழர்கள் ஏ. வி. பெரியண்ணன், வீ. பெருமாள், இ. மாணிக்கம் ஆகியோர்களால் 'ஆர்ட்' காகிதத்தில் அழகாக 10"x14" அளவில் வெளியிடப்பட்ட "பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் படம் ஒன்று வரப்பெற்றோம். விபரம் வேண்டுவோர் திருச்சி மண்ணச்சநல்லூர், தோழர் இ. மாணிக்கம் மூலமாக எழுதித் தெரிந்துகொள்ளவும்.

### "அஞ்சல் முறை"

எழுதியவர்: ஐ. சுப்பையா; விலை அணா 6; கிடைக்குமிடம்: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 6, பவளக்காரத் தெரு, சென்னை.

அஞ்சல் (தபால்) முறையைப் பற்றி எளிய நடையில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. அஞ்சல் சம்பந்தமாக வழங்கப்படும் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களை இதில் காணலாம். தமிழ் மக்களுக்கு இது பேருதவியாகவிருக்கும் என்று நம்புகிறோம்.

### "குழந்தை பேச்சு"

[எழுதியவர்: ஐ. சுப்பையா; விலை அணா 4; கிடைக்குமிடம்: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.]

ஆசிரியரின் குழந்தை இரண்டாவது ஆண்டு முதல் மூன்றாவது ஆண்டு முடியப் பேசிய பேச்சுக்களைக் குறித்து வைத்து இந்நூலில் ஆசிரியர் எழுதியிருக்கிறார். இந்நூலிலிருந்து இரண்டு வயதிலிருந்தே நம் நாட்டுக் குழந்தைகள் எவ்வளவு தூரம் மூடப்பழக்கத்தில், மூட நம்பிக்கையில் பழக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறார்கள் என்பது நன்கு விளங்கும். இத்தகைய மூடப்பழக்கத்தில் வளர்க்கக்கூடாதென்பதை உணர்த்துவதற்கு இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கவேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம்.

### "இஸ்லாமியின் எழுச்சி"

[எழுதியவர்: மதனி; விலை அணா. 4 கிடைக்குமிடம்: 'ஹாஜி ஸன்ஸ்' பதிப்பகம், ஆத்தூர், (சேலம்).]

புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களின் கவிதைகளைக் கண்டு களித்து தாமும் அதுபோன்று கவிதை புனையலாம் என்ற துணிவுகொண்டு இஸ்லாத்தின் எழுச்சியை தோழர் 'மதனி' அவர்கள் தீட்டியிருக்கிறார். இஸ்லாத்தின் அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும், முஸ்லிம்களால் வந்த கேட்டையும், முஸ்லிம் லீக் தோற்றத்தையும், பாகிஸ்தான் இயல்பையும் இந்நூலில் விளக்கியிருக்கிறார். இஸ்லாத்தின் சிறப்பையும், இஸ்லாமியர்களின் நிலைமையையும் இந்நூல் வாயிலாக நன்குத் தெரிந்துகொள்ளலாம்.

ஈரோடு மருத்துவர் சங்கப் பொக்கிஷதார் தோழர் வி. கே. பழனிச்சாமி மனைவி காரியம்மாள் மறைவுக்காக ஷை சங்கத்தில் தோழர் குப்புமுத்து தலைமையில் 5-7-45-ந் தேதி ஒரு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.